மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : OS 26/2023

பெயர் : மகேஸ்வரி (PW1)

க/பெ : மகாலிங்கம்

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of August 2023

**2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் இந்த வழக்கில் வாதி. நான் இந்த வழக்கினை என் அப்பா சொத்தை தெரியாமல் விற்றதற்காக தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் தெரியாமல் விற்றதற்கு ஏதாவது பதில் வேண்டுமென்று தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கினை தாக்கல் செய்தபோது எனக்கு 42 வயது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.04.2019 ல் எனக்கு 42 வயது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) என் அப்பா இறந்த தேதி நினைவில் இல்லை. என் அப்பா இறக்கும்போது நான் என் அம்மாவின் கருவில் இருந்தேன், பிறக்கவில்லை. வழக்கில் சர்வே எண், விஸ்தீரணம் , 4 மால் ஆகியவை படிப்பறிவு இல்லாததால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா ஆதியில் இருந்தது என்றால் என் அப்பா பெயரில். அதன்பின்னர் யார் பெயருக்கும் மாறவில்லை. என் அப்பா பெயரில்தான் இருக்கிறது.

3) நான் தாக்கல் செய்திருக்கும் 6 ஆவணங்களும் பட்டா சம்மந்தப்பட்டது கிடையாது என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி விபரம் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டா என் தாயார் ராஜரத்தினம்பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா. ஆ 1 என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்திருக்கும் மற்ற ஆவணங்களும் என்ன ஆவணங்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4) 1ம் பிரதிவாதிக்கு என்னுடைய தாயார் தானமாக கொடுத்ததுதான் தபசில் சொத்து என்றால் இல்லை. என்னை படிக்கவைத்து திருமணம் செய்து கொடுத்தது என் சகோதரர் 1வது பிரதிவாதிதான் என்றால் அம்மாவும் செய்தார். என் அம்மா எந்த வேலைக்கும் செல்லவில்லை வருமானம் கிடையாது என்றால் சரிதான்.

5) தாவா சொத்தினையும் வேறு சொத்தினையும் சேர்த்து 1 வது மற்றும் 8 வது பிரதிவாதிகள் 11வது பிரதிவாதிக்கு பவர் எழுதி கொடுத்துள்ளார் என்றால் பவர் எழுதி கொடுக்கவில்லை. மேற்படி பவர் பத்திரத்தை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். 11ம் பிரதிவாதி 10ம்பிரதிவாதியான கம்பெனிக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் காற்றாலை இயங்கி வருகிறது என்றால் சரிதான். அதனை ஆட்சேபித்து நான் பசுவந்தனை காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன்.

6) அவ்வாறு புகார் கொடுத்தற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை அவ்வாறு புகார் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 8 மற்றும் 9 ம் பிரதிவாதிகள் என் உடன் பிறந்த சகோதரிகள். அவர்கள் இருவரும் 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை விற்றதை பொறுத்து எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

7) என் தாயார் 1ம் பிரதிவாதிக்கு தானமாக கொடுத்த விபரம் எனக்கும் தெரியும் ஆனால் அதிக பணம் பெறவேண்டும் என்பதற்காக தெரியாது என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1976 ல் என் தந்தையார் இறந்ததில் இருந்து இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை பாகம் கேட்டு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8) தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றாலும் 1 ம் பிரதிவாதிக்குதான் உரிமை உள்ளது என்றாலும் சரியல்ல. எனக்கு வழக்கு தாக்கல் செய்ய வியாஜ்ஜிய மூலம் கிடையாது என்றாலும் இந்த வழக்கில் எந்தவித பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் நான் 5 பரிகாரங்கள் கோரியுள்ளேன் அந்த 5 பரிகாரமும் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் 5ம் குறிப்பிட்டு சொல்ல தெரியாது என் அப்பா சொத்தை தெரியாமல் விற்றதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

9)சொத்தை விற்றது எனக்கு எப்போது தெரியும் என்றால் தேதி மாதம் தெரியாது காற்றாலை மாட்டிக்கொண்டிருக்கும்போது தெரியும். கிரைய விபரம் வில்லங்கசான்றிதழ் பெற்று பார்த்ததில் தெரியவந்தது. மேற்படி வில்லங்க சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விஷயம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10) தாவா சொத்து கூட்டாக அனுபவித்தோம் என்றும் நான் உடை மரத்தை வெட்டு விற்று அனுபவித்து என்று சொல்லியுள்ளேன் அதில் எது சரியானது என்றால் கூட்டனுபவத்தில்தான் இருந்தது. கூட்டனுபவம் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் நிதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பயிர் வைத்து விவசாயம் செய்தோம் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் தாவா சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல.

11) 1985 ம் ஆண்டே என் தாயார் பட்டா எண். 416 வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன்பின்னர் என் சகோதரர் 1 வது பிரதிவாதியின் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் என் தகப்பனார் பெயரில்தான் பட்டா உள்ளது. எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது கிடையாது என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.